TNED140031672024

Presented on : 28-06-2024
Registered on : 13-09-2024
Decided on : 13-07-2026
Duration : 2 years, 0 months, 15 days

**நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றம், பவானி**

**முன்னிலை: திரு. J.ராஜ்குமார், B.A., LL.B.,**
**நீதித்துறை நடுவர் எண் 1. பவானி.**

2026ம் ஆண்டு ஜீலை மாதம் 13ம் நாள் திங்கட்கிழமை
2057 திருவள்ளுவர் ஆண்டு ஸ்ரீ பராபவ வருடம் ஆனி திங்கள் 29ம் நாள்

**சுருக்குமுறை விசாரணை வழக்கு எண்.484/2024**

மாநில அரசுக்காக
காவல் சிறப்பு உதவி ஆய்வாளர்,
பவானி காவல் நிலையம்,
பவானி.
(குற்ற எண். 225/2023). ... குற்றமுறையிடுபவர்

//எதிர்//

செந்தில்குமார் (45/2023),
த/பெ.சீரங்கன் ... எதிரி

Case Summary

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்றத்தின் குற்ற எண். | காவல் சிறப்பு உதவி ஆய்வாளர்,<br>பவானி காவல் நிலையம்,<br>பவானி.<br>(குற்ற எண். 225/2023). |
| 2. | எதிரியின் பெயர் | செந்தில்குமார் (45/2023),<br>த/பெ.சீரங்கன் |
| 3. | எதிரியின் முகவரி | க.எண்.228D, GG நகர் குருவரெட்டியூர், அந்தியூர் வட்டம், ஈரோடு மாவட்டம். |
| 4. | குற்ற நிகழ்வு நாள் | 09.09.2023 |
| 5. | புகார் தேதி | 09.09.2023 |
| 6. | எதிரி கைது செய்யப்பட்ட தேதி | N/A |



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.13 18:18:08 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| 7. | எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | Station Bail | | |
| 8. | Commitment | N/A | | |
| 9. | கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட விவரம் மற்றும் அதன் முடிவுகள் | N/A | | |
| 10. | வழக்கின் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | சாட்சிகள் | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | அ.சா.1 | 24.06.2025 | 24.06.2025 |
| | | அ.சா.2 | 24.06.2025 | 24.06.2025 |
| | | அ.சா.3 | 14.07.2025 | 14.07.2025 |
| | | அ.சா.4 | 06.04.2026 | 06.04.2026 |
| | | அ.சா.5 | 03.06.2026 | 03.06.2026 |
| | விசாரணை முடிக்கப்பட்ட தேதி | 06.06.2026 | | |
| 12 | தண்டனை அல்லது உத்தரவு | 13.07.2026 | | |
| 13 | தீர்ப்பு பகரப்பட்ட நாள் | 13.07.2026 | | |
| 14. | காலதாமதத்திற்கான காரணம் | அரசு தரப்பில் சாட்சிகள் முன்னிலைபடுத்துவதில் காலதாமதம் | | |

இவ்வழக்கு கடந்த 13.09.2024ம் தேதியில், இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இதுநாள் வரையில் விசாரணையில் இருந்து, அரசு தரப்பில் திருமதி. P.கயல்விழி, கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை – II அவர்களும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. A.பிரகாஷ் அவர்களும் ஆஜராகி நடத்திட, இரு தரப்பு வாதங்களை கேட்டும், சாட்சியங்கள், சான்றாவணங்கள் மற்றும் வழக்காவணங்கள் அனைத்தையும் பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## தீர்ப்புரை

### 1. அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையின் சுருக்கம்

கடந்த 09.09.2023ம் தேதியில், பகல் 14.12 மணிக்கு, பவானி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட, ஆலமரம் பிரிவு ரோட்டில் சாட்சி.1 வரதராஜன் என்பவர் TN 33 BE



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.07.13 18:18:12 +0530

7560 என்ற இருசக்கர வாகனத்தை சாட்சி.2 லோகேஸ்வரி என்பவரை பின்னால் உட்கார வைத்துக்கொண்டு மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி பவானியிலிருந்து ஒலகடம் செல்லும் சாலையில் வலதுபுறமாக திரும்ப நின்றிருந்தபோது, தெற்கிலிருந்து வடக்கு நோக்கி TN 28 J 2323என்ற ஹீண்டாய் அசெண்ட் காரை எதிரி அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து மேற்படி சாட்சி.1ன் வாகனத்தின் மீது மோதி சாட்சி.1 வரதராஜன் என்பவருக்கு வலது கால் பாதம், கால் முழங்காலுக்குக் கீழ், இடது கால் முழங்காலுக்கு கீழும் கொடுங்கயாத்தையும், இருசக்கர வாகனத்தின் பின்னால் உட்கார்ந்து வந்த சாட்சி.2 லோகேஸ்வரி என்பவருக்கு முன் நெற்றி, வலது கை மணிக்கட்டு, மேல் கை ஆகிய இடங்களில் கொடுங்காயத்தையும் ஏற்படுத்தியுள்ளார் என்றும், எனவே, எதிரி இ.த.ச. பிரிவுகள் 279, 338 (2 Counts)ன் கீழ் குற்றம் புரிந்துள்ளதாக கூறி, பவானி காவல் நிலைய, காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இவ்வழக்கின் எதிரி அழைப்பாணையின் அடிப்படையில் ஆஜரானதும், இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக கு.வி.மு.ச.பிரிவு 207ன் கீழ், எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டது. எதிரி மீதான குற்ற செயல்களை விசாரிக்க போதுமான முகாந்திரம் இருந்ததால், எதிரி மீது இ.த.ச.பிரிவுகள் 279, 338 (2 Counts) ன் கீழ் குற்றச்சாட்டின் சாராம்சத்தை கு.வி.மு.ச. பிரிவு 251ன் படி விளக்கி கூறப்பட்டபோது, எதிரி குற்றத்தை மறுத்ததால், அரசு தரப்பு விசாரணைக்கு நெறிபடுத்தப்பட்டார்.

3. அரசு தரப்பில் அ.சா.1 முதல் 5 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

4. **<u>அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம்:-</u>**

கடந்த 09.09.2023ம் தேதியில், பகல் 14.12 மணிக்கு, பவானி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட, ஆலமரம் பிரிவு ரோட்டில் சாட்சி.1 வரதராஜன் என்பவர் TN 33 BE



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.13 18:18:14 +0530

7560 என்ற இருசக்கர வாகனத்தை சாட்சி.2 லோகேஸ்வரி என்பவரை பின்னால் உட்கார வைத்துக்கொண்டு மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி பவானியிலிருந்து ஒலகடம் செல்லும் சாலையில் வலதுபுறமாக திரும்ப நின்றிருந்தபோது, தெற்கிலிருந்து வடக்கு நோக்கி TN 28 J 2323என்ற ஹீண்டாய் அசெண்ட் காரை எதிரி அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து மேற்படி சாட்சி.1ன் வாகனத்தின் மீது மோதி சாட்சி.1 வரதராஜன் என்பவருக்கு வலது கால் பாதம், கால் முழங்காலுக்குக் கீழ், இடது கால் முழங்காலுக்கு கீழும் கொடுங்கயாத்தையும், இருசக்கர வாகனத்தின் பின்னால் உட்கார்ந்து வந்த சாட்சி.2 லோகேஸ்வரி என்பவருக்கு முன் நெற்றி, வலது கை மணிக்கட்டு, மேல் கை ஆகிய இடங்களில் கொடுங்காயத்தையும் ஏற்படுத்தியுள்ளார்.

4.2 அ.சா.5 திரு சக்திவேல் பவானி காவல் நிலையத்தில் சிறப்பு உதவியாளராக பணியில் இருந்தபோது, கடந்த 09.09.2023–ம் தேதியன்று மாலை 16.00 மணிக்கு நிலைய தலைமை காவலர் வேலுச்சாமி என்பவர் நிலையை அலுவலகத்தில் இருந்த பொழுது பவானி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற ராமசாமி மகன் வரதராஜன் மற்றும் அவரது மனைவி லோகேஸ்வரி ஆகியோர்களது RTA இன்டிபெஷனை பெற்று மேற்படி மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது காயம்பட்ட நபர்கள் இருவரும் மேல் சிகிச்சைக்காக பவானி மெடிக்கல் சென்டர் மருத்துவமனைக்கு சென்று விட்ட விபரம் தெரிந்து பவானி மெடிக்கல் சென்டர் மருத்துவமனைக்கு சென்று அங்கு உள் நோயாளியாக சிகிச்சையில் இருந்த வரதராஜன் என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்து, நிலையம் வந்து நிலைய குற்ற எண் 325/ 2023, இ.த.ச பிரிவுகள் 279, 337 கீழ் அ.த.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்.

4.3 பின்னர், சம்பவ இடம் சென்று சம்பவ இட சாட்சிகளான அண்ணாதுரை மற்றும் ராஜேந்திரன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜரும், அ.த.சா.ஆ.4 மாதிரி வரைபடமும் தயார் செய்தும், பின்னர் சாட்சிகள் வரதராஜன், லோகேஸ்வரி, ராஜேந்திரன் S/O.ஸ்ரீரங்கன், அண்ணாதுரை, ராஜேந்திரன்S/O. ராமசாமி ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம்



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.13 18:18:18 +0530

பதிவு செய்தும், தனது புலன் விசாரணையில் இருந்தும் சாட்சிகளின் வாக்கு மூலங்களிலிருந்தும் சம்பவம் உண்மையான தெரிய வந்ததால் எதிரியை தேடி வந்த நிலையில் கடந்த 02.10.2023ம் தேதியன்று நிலையம் ஆஜராகி குற்றத்தை ஒப்புக்கொண்ட எதிரி செந்தில்குமார் என்பவரை கைதுக்கான காரணம் கூறி கைது செய்தும், தக்கநிலையப்பிணையில் விடுவித்துள்ளார்.

4.4 விபத்தில் தொடர்புடைய வாகனங்களின் ஆவணங்களை பெற்று மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பி மோட்டார் வாகன ஆய்வாளரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, அ.சா.ஆ.5 TN 33 BE 7560 என்ற பதவு எண் கொண்ட இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை, அ.சா.ஆ.6 TN 28 J 2323 என்ற பதிவு எண் கொண்ட காரின் மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை பெற்றும், பின்னர் காயம்பட்ட சாட்சிகள் வரதராஜன் மற்றும் லோகேஸ்வரி ஆகியோர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் தம்பிராஜா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அ.சா.ஆ.7 பவானி மெடிக்கல் சென்டர் மருத்துவமனையில் சாட்சி வரதராஜுன் காயச்சான்று, அ.சா.ஆ.8 சாட்சி லோகேஸ்வரியின் காயச்சான்று பெற்றும், மருத்துவர் வழங்கிய காயசான்று சாட்சிகள் வரதராஜன் மற்றும் லோகேஸ்வரி ஆகியோர்களுக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என குறிப்பிடப்பட்டிருந்ததால், வழக்கின் இ.த.ச பிரிவை 279, 337 விலிருந்து இ.த.ச பிரிவுகள் 279, 338 ஆக மாறுதல் செய்து அ.சா.ஆ.9 சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தும், அத்துடன் தனது புலன் விசாரணையை முடித்து கடந்த 26.10.2023ம் தேதியன்று எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 279, 338 ன் கீழ் இறுதி அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளளார் என அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

5. அரசு தரப்பு சாட்சியத்தில் இருந்து எதிரியை குற்றத்தோடு இணைவுபடுத்தும் சங்கதிகளை தொகுத்து கு.வி.மு.ச.பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவியபோது எதிரி பொய் சாட்சி என்று கூறினார். இந்த வழக்கு பற்றி பொதுவாக கூற வேண்டுமா என்று வினவியபோது பொய் வழக்கு என்று கூறினார். எதிரி பக்கம் விசாரிக்க சாட்சிகள் எவரும் உண்டா என்று வினவியபோது இல்லை என்று கூறினார்.



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.13 18:18:21 +0530

6. இந்த வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட இ.த.ச.பிரிவுகள் 279, 338 (2 counts)ன் கீழான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே ஆகும்.

7. **தீர்வு**

கற்றறிந்த அரசுத்தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், கடந்த 09.09.2023ம் தேதியில், பகல் 14.12 மணிக்கு, பவானி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட, ஆலமரம் பிரிவு ரோட்டில் சாட்சி.1 வரதராஜன் என்பவர் TN 33 BE 7560 என்ற இருசக்கர வாகனத்தை சாட்சி.2 லோகேஸ்வரி என்பவரை பின்னால் உட்கார வைத்துக்கொண்டு மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி பவானியிலிருந்து ஒலகடம் செல்லும் சாலையில் வலதுபுறமாக திரும்ப நின்றிருந்தபோது, தெற்கிலிருந்து வடக்கு நோக்கி TN 28 J 2323என்ற ஹீண்டாய் அசெண்ட் காரை எதிரி அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து மேற்படி சாட்சி.1ன் வாகனத்தின் மீது மோதி சாட்சி.1 வரதராஜன் என்பவருக்கு வலது கால் பாதம், கால் முழுங்காலுக்குக் கீழ், இடது கால் முழுங்காலுக்கு கீழும் கொடுங்கயாத்தையும், இருசக்கர வாகனத்தின் பின்னால் உட்கார்ந்து வந்த சாட்சி.2 லோகேஸ்வரி என்பவருக்கு முன் நெற்றி, வலது கை மணிக்கட்டு, மேல் கை ஆகிய இடங்களில் கொடுங்காயத்தையும் ஏற்படுத்தியுள்ளார் என்றும், சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலமாகவும் மெய்ப்பிக்கப்பட்டுள்ளதால் எதிரியை குற்றவாளி என தீர்மானித்து அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டுமென வாதிட்டார்.

8. எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில் எதிரியின் அஜாக்கிரதையால் மேற்படி விபத்து நடைபெறவில்லை என்றும், இவ்வழக்கில் அ.சா.1 வரதராஜன் சாலையில் வரும் வாகனத்தை கவனிக்காமல் அவரது இருசக்கர வாகனத்தை ஓட்டிச் சென்றதால் மேற்படி விபத்து நடைபெற்றது என்றும், எதிரியின் அஜாக்கிரதையால் மேற்படி விபத்து ஏற்பட்டதாக சாட்சிகள் குறிப்பிட்டு சாட்சியமளிக்காத நிலையில் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து அவரை விடுதலை செய்யவேண்டுமென வாதிட்டார்.



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.13 18:18:26 +0530

9. இவ்வழக்கில் அரசு தரப்பு முதலாவதாக விபத்து ஏற்படுத்திய வாகனம் அடையாளப்படுத்தப்படும், இரண்டாவதாக விபத்து ஏற்படுத்திய வாகனத்தை எதிரி தான் அதிவேகமாகவும், அல்லது கவனக்குறைவாகவும் ஓட்டினார் என்றும், மூன்றாவதாக எதிரி வாகனத்தை அவ்வாறு ஓட்டி கொடுங்காயம் ஏற்படுத்தியுள்ளார் என்றும் அரசு தரப்பில் நிரூபிக்க வேண்டும்.

10. இவ்வழக்கில் அ.சா.1 வரதராஜன் பாதிக்கப்பட்ட மற்றும் புகார்தாரராகவும், அ.சா.2 அண்ணாதுரை, அ.சா.3 ராஜேந்திரன் பார்வை மகஜர் சாட்சிகளாகவும், அ.சா.4 லோகேஸ்வரி கண்ணுற்ற சாட்சியாகவும், அ.சா.5 சக்திவேல் புலன் விசாரணை அதிகாரியாக முன்னிலைபடுத்தப்பட்டுளனர்.

**11. இ.த.ச பிரிவு 279கீழ்கண்டவாறு கூறிகிறது.**

பொது பாதையில் முரட்டுத்தனமாக ஓட்டுதல் அல்லது சவாரி செய்தல், மனித உயிருக்கு ஆபத்து உண்டாக்கும் விதமான அல்லது வேறு எவருக்கேனும் காயம் அல்லது கேடு விளைவிக்கக்கூடிய அத்தகைய வகையிலும் பொதுப்பாதை ஏதோவொன்றிலும் வண்டி எதையும் முரட்டுத்தனமாக அல்லது கவனக்குறைவாக ஓட்டுகிற அல்லது சவாரி செய்கிற எவறாயினும் 6 மாதங்கள் வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக்கு சிறை தண்டனை வகைகள் இரண்டில் ஒன்றோ அல்லது ஓர் ஆயிரம் வரை நீடிக்கக்கூடிய அபராதமும் அல்லது இரண்டும் விதித்து தண்டிக்கப் படவேண்டும்.

11.1 மேற்படி பிரிவின்படிக்கு முதலாவது உட்கூறான பொதுப்பாதை மற்றும் இரண்டாவது உட்கூறான ஆஜர் எதிரிதான் வாகனத்தை இயக்கினாரா என்பதை பொறுத்து இருதரப்பிலும் எந்தவித ஐயப்பாடும் இல்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

11.2 மேற்படி பிரிவின்படிக்கு மூன்றாவது உட்கூறான எதிரி அசட்டுத்தனமான தகாதுணிச்சல் அல்லது கவனக்குறைவாக அவரது இருசக்கர வாகனத்தை இயக்கி



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.13 18:18:28 +0530

அ.சா.1 மற்றும் அ.சா.4 ஆகியோருக்கு கொடுங்கயாத்தை ஏற்படுத்தினாரா என்று பரிசிலனை செய்கையில், அ.சா.1 வரதராஜன் தனது சாட்சியத்தில், கடந்த 09.09.2023ம் தேதியன்று தான் தனது இருசக்கர வாகனத்தை ஓட்ட தனது மனைவி பின்னால் அமர்ந்து கொண்டு மதிய நேரத்தில் மயிலம்பாடி, ஆலமர பேருந்து நிறுத்தம் அருகில் சென்று கொண்டிருந்தபோது தான் ஆலமரம் பேருந்து நிறுத்தம் அருகில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி திரும்பும்பொழுது மயிலம்பாடியில் இருந்து ஒலகடம் நோக்கி வந்த கார் தன் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி விட்டதாகவும், தானும், தனது மனைவியும் கீழே விழுந்து விட்டதாகவும், தனக்கு வலது கால் தொடை, வலது முழங்கால் மற்றும் வலது கால் பெருவிரலுக்கு பக்கத்து விரல் ஆகிய இடங்களில் அடிபட்டதாகவும், தனது மனைவிக்கு நெற்றி மற்றும் வலது முழங்கையிலும் காயம் ஏற்பட்டதாவும், பின்னர் அருகில் இருந்தவர்கள் 108 ஆம்புலன்ஸ் வந்தவுடன் அருகில் இருந்தவர்களின் உதவியுடன் தாங்கள் இருவரும் பவானி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வந்தும், பவானி மெடிக்கல் சென்டர் மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக சென்றும், அங்கு வந்த போலீசார் தன்னை விசாரித்து அ.த.சா.ஆ.1 புகார் வாக்குமூலம் பதிவு செய்தும், விபத்து ஏற்பட்டவுடன் தான் மயக்க நிலையில் இருந்ததால் மேற்படி காரை ஓட்டி வந்த நபரை தன்னால் பார்க்க இயலவில்லை என்று சாட்சியமளித்துள்ளார்.

11.3 அ.சா.3 ராஜேந்திரன் தனது சாட்சியத்தில், கடந்த ஓராண்டுக்கு முன்பு ஒருநாள் காலை 9 –10 மணியளவில், தான் தனது வீட்டில் இருந்தபோது குப்பிச்சிபாளையத்தை சேர்ந்த வரதராஜன் என்பவர் அவரது இருசக்கர வாகனத்தை ஓட்ட பின்னால் அவரது மனைவி லோகேஸ்வரி அமர்ந்து கொண்டு மயிலம்பாடி ஆலமரம் பிரிவு ரோட்டில், மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்து பவானி ஒலக்கடம் ரோட்டில் வலது புறமாக திரும்ப நின்று கொண்டிருந்தபோது, பவானியில் இருந்து, ஒலக்கடம் ரோட்டில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்த கார், மேற்படி பைக்கின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி விட்டதாகவும், தான் வீட்டில் இருந்தேன் சத்தம் கேட்டு அருகில் சென்று பார்த்த போது பைக்கை ஓட்டி வந்த வரதராஜன் என்பவருக்கு வலது கால் பாதத்தில் பலத்த வெட்டுக்காயம் இருந்ததாகவும்,. லோகேஸ்வரிக்கு நெற்றியில் பலத்த காயம்



RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.07.13 18:18:32 +0530

ஏற்பட்டும், பின்னர் சிறிது நேரம் அமர வைத்து ஆம்புலன்ஸ்க்கு தகவல் தெரிவித்து ஆம்புலன்ஸ் வந்தவுடன் அவர்களை சிகிச்சைக்காக அனுப்பி வைத்துவிட்டு தான் வீட்டிற்கு சென்றுவிட்டதாகவும் கூறி சாட்சியமளித்துள்ளார்.

11.4 அ.சா.4 லோகேஷ்வரி தனது சாட்சியத்தில், சுமார் 2 – 1/4 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் மதியம் சுமார் 2 – 1/4 மணி அளவில் இருசக்கர வாகனத்தை தனது கணவர் அ.சா.1 வரதராஜன் ஓட்ட தான் பின்னால் அமர்ந்து கொண்டு மைலம்பாடி ஆலமர பிரிவு ரோட்டிலிருந்து குப்பிச்சிபாளையத்தில் உள்ள தங்கள் வீட்டிற்கு செல்வதற்காக வலது புறமாக தெற்கு நோக்கி திரும்ப திரும்பியபோது தெற்கிலிருந்து வந்த கார் வேகமாக வந்து தங்கள் வாகனத்தின் மீது மோதியதாகவும், இருவரும் வண்டியில் இருந்து கீழே விழுந்து விட்டதாகவும், தனக்கு தலை மற்றும் வலது கை ஆகிய இடங்களில் காயம்பட்ட வலது கையில் எலும்பு முறிவு ஏற்பட்டு இருந்ததாகவும், தனது கணவருக்கு வலது கால் மற்றும் வலது கால் தொடை ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டிருந்ததாகவும், அருகிலிருந்தவர்களின் உதவியுடன் 108 ஆம்புலன்ஸ் மூலமாக பவானி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வந்தும், மெடிக்கல் சென்டர் மருத்துவமனைக்கு சென்றும், திடீரென அடிபட்டதால் தான் பதட்டத்தில் இருந்ததாகவும், அதனால் காரை ஓட்டி வந்த நபரை தான் சரியாக அடையாளம் பார்க்கவில்லை என்றும் கூறி சாட்சியமளித்துள்ளார்.

11.5 வழக்கிற்கு அடிப்படையான புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையை பரிசீலனை செய்கையில், புகாரானது விபத்து நடைபெற்ற அன்றே கொடுக்கப்பட்டுள்ளது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேலும், புகாரின் அடிப்படையில் 09.09.2023ம் தேதி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை 12.09.2023ம் தேதிதான் இந்நீதிமன்றத்தால் பெறப்பட்டுள்ளது என்று தெரியவருகிறது. மேற்படி 3 நாட்கள் காலதாமதத்திற்கு அரசு தரப்பில் எவ்வித விளக்கமும் கொடுக்கவில்லை என்பதும் இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. புகாரானது சொன்ன தேதியில் நேரத்தில் பதிவு செய்யப்பட்டதா என இந்நீதிமன்றத்திற்கு சந்தேகம் எழும் வகையில் அமைந்துள்ளது.



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.13 18:18:34 +0530

11.6 மேற்படி சாட்சிகளின் சாட்சிகளை பரிசீலனை செய்கையில், அ.சா.1 மற்றும் அ.சா.4 இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட மற்றும் காயம்பட்ட சாட்சிகள் என்பதை நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. அ.சா.1 தனது சாட்சியத்தில் கார் என் மீது மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டதாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும், அ.சா.4 தனது சாட்சியத்தில், தெற்கிலிருந்து வந்த கார் வேகமாக வந்து எங்கள் மீது மோதியது என சாட்சியம் அளித்துள்ளார் என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேலும், அரசு தரப்பு சாட்சிகள் எதிரியின் அசட்டுத்தனமான தகா துணிச்சசல், கவனக்குறைவு எனக் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை என்றாலும், சாதாரண மனிதன் கூறுவது போல் எதிரிதியின் அஜாக்கிரதை அசட்டுத்தனமாக தகா துணிச்சல் என்று சொன்னாலே போதும். ஆனால், அரசு தரப்பு சாட்சிகள் அவ்வாறு எதுவும் சாட்சியம் அளிக்கவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேலும், மாண்புமிகு உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றம் பல்வேறு முன் தீர்ப்புகளில் அதிவேகம் மட்டுமே எதிரியின் அசட்டுத்தனமாக தகா துணிச்சல் மற்றும் கவனக்குறைவை குறிக்காது என்று கூறியுள்ளது.

11.7 மேலும், இந்த வழக்கில் கண்ணுற்ற சாட்சியான அ.சா.3 தனது முதல் விசாரணை சாட்சியத்திற்காக தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால், சரிதான் என சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சாட்சியத்திலிருந்து, அ.சா.3 முதல் விசாரணை சாட்சியத்தில் சாட்சியம் அளித்திருப்பது போல் சம்பவத்தை பார்த்தாரா என இந்நீதிமன்றத்திற்கு சந்தேகம் எழும் வகையில் அமைந்துள்ளது.

11.8 பார்வை மகஜர் சாட்சியான அண்ணாதுரை தனது சாட்சியத்தில், சுமார் 2 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் ஆலமரத்து பிரிவு அருகில் விபத்து நடைபெற்று இருந்ததாகவும், விபத்து நடைபெற்றதற்கு மறுநாள் போலீசார் வந்து விசாரித்து அ.சா.ஆ.2 பார்வை மகஜர், மாதிரி வரைபடம் வரைந்தும், தன்னிடம் சாட்சி கையொப்பம் கேட்டதால், தான் சாட்சி கையொப்பம் செய்ததாகவும் கூறி சாட்சியமளித்துள்ளார்.



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.13 18:18:38 +0530

11.9 ஆகவே, மேற்படி சாட்சியத்திலிருந்து ஆவணத்தின் உள்ளடக்கத்தை தெரியாமல் அ.சா.2 கையொப்பம் செய்திருப்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேலும், எதிரி தரப்பில் வாதிடுவது போல், பார்வை மகஜர் சம்பவ இடத்தில் வைத்து தயாரிக்கப்பட்டதா என இந்நீதுமன்றத்திற்க்கு சந்தேகம் எழும் வகையில் அமைந்துள்ளது. மேலும், மாதிரி வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிமியர் சொட்டு நீர் பைப் கடை, கார்த்தி மொபைல் கடை, சிவாஜி மளிகை கடை, நல்ல குட்டி பால் கடை, தனா என்பவரது மளிகை கடை, ஜெய் இனிப்பு கடை போன்றவை சம்பவயிடத்தில் உள்ள சாட்சிகளை விசாரிக்கவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. மேலும் மற்றொரு பார்வை மகஜர் சாட்சியான ராஜேந்திரன் என்பவரின் அரசு தரப்பில் விசாரிக்கவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. விசாரிக்காததற்கான எந்த காரணமும் தெரிவிக்கவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

11.10 மேலும், விபத்து ஏற்படுத்திய வாகனமானது 15.09.2023ம் தேதி ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது என்பது அ.சா.ஆ.6 பரிசீலனை செய்கையில் இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. விபத்து ஏற்பட்ட வாகனமானது 15.09.2023ம் தேதி ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது என்பது அ.சா.ஆ.5 பரிசீலனை செய்கையில் இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

**State of Karnataka/vs/Sathish**

**1998 (8) SCC 493**

in which our Hon'ble Apex Court categorically observed that, *"4. Merely because the truck was being driven at a "high speed does not bespeak of either "negligence" or "rashness" by itself. None of the witnesses examined by the prosecution could give any indication, even approximately, as to what they meant by "high speed." High Speed" is a relative term. It was for the prosecution to bring on record material to establish as to what it meant by "high speed" in the facts and circumstances of the case. In a criminal trial, the burden of providing everything essential to the establishment of the charge against an accused always rests on the prosecution and there is a presumption of innocence in favour of the accused until the contrary is proved. Criminality is not to be presumed, subject of course to some statutory exceptions...*



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.13 18:18:40 +0530

11.11 மாண்புமிகு உச்சநீதிமன்றம் Ravi kapur VS State of Rajasthan எனும் வழக்கில் அசட்டுத்தனமாக தகாதுணிச்சல், கவனக்குறைவாகவும் வாகனம் ஒட்டுதல் நேரடியான சாட்சியம் அல்லது சுற்றியுள்ள சூழ்நிலைகள் மற்றும் அசட்டுத்தனமாக தகாதுணிச்சல், கவனக்குறைவாகவும் வாகனம் ஓட்டுதல் அனுமானம் ஆகியவற்றின் மூலம் நிரூபணம் செய்யப்படலாம் மேலும் சுற்றியுள்ள சூழ்நிலைகள் மூலம் வழக்கானது நிரூபணம் செய்யப்படும் நிலையில் செயலே செப்பும் (Doctrine of res ipsa loquittur) என்ற முது மொழியும் பொருந்தும் என்று கூறப்பட்டுள்ளது. மேற்படி பரிசீலனையின் அடிப்படையில், அரசு தரப்பில் எதிரியின் அசட்டுத்தன்மாக தகா துணிச்சல், அஜாக்கிரதையின் காரணமாக விபத்து ஏற்பட்டது என சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், செயலே செப்பும் என்கிற விதிப்படியும் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என முடிவு கண்டு எதிரிக்கு எதிரான இ.த.ச. பிரிவு 279ன் படியாக உட்கூறு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் தீர்வு காணப்படுகிறது.

## 12. இ.த.ச. பிரிவு 338 (2 Counts)கீழ்கண்டவாறு கூறுகிறது.

மனித உயிருக்கு அல்லது மற்றவர்களின் உடற் பாதுகாப்பிற்கு அபாயம் ஏற்படும் அளவிற்கு கவனக்குறைவாக அல்லது முரட்டுத்தனமாக எந்த செய்கையேனும் செய்வதன் மூலம் எவருக்கேனும் கொடுங்காயம் விளைவிக்கிற எவரொருவரும் 2 ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவு சிறைதண்டனை வகைகள் இரண்டில் ஒன்றோ அல்லது ஓராயிரம் வரை அபராதமோ அல்லது இரண்டுமோ விதித்து தண்டிக்கப்படுதல் வேண்டும்.

12.1 மேற்படி பிரிவின்படி எதிரியின் அதிவேகம் மற்றும் கவனக்குறைவினால் அ.சா.1, 4 ஆகியோருக்கு எதிரி கொடுங்காயத்தை ஏற்படுத்தினார் என்று அரசு தரப்பில் நிரூபித்தல் வேண்டும். இந்நிலையில் அ.சா.ஆ.7, 8 காயச்சான்றிதழை பரிசீலனை செய்கையில், மேற்படி அ.சா.1, 4 ஆகியோருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்பது



RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.13 18:18:44 +0530

அ.சா.ஆ.7, 8 மூலம் அரசுதரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. ஆனால், இ.த.ச பிரிவு 279ன் கீழ் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படாததால் அ.சா.1, 4 ஆகியோருக்கு ஏற்பட்ட காயமானது எதிரியின் அசட்டுத்தனமான தகாதுணிச்சல் மற்றும் கவனக்குறைவால் ஏற்பட்டது என தீர்மானிக்க இயலாது. எனவே, எதிரிக்கு எதிரான இ.த.ச பிரிவு 338 (2 counts)ன் கீழான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றே முடிவு செய்யப்படுகின்றது.

13. **முடிவாக**, எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் எந்தவிதமான ஐயத்திற்கிடமின்றி மெய்ப்பிக்கப்படாத நிலையில் எழும் ஐயத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை **இ.த.ச.பிரிவுகள் 279, 338 (2 counts)ன்** கீழ் குற்றவாளி இல்லை என தீர்மானித்து **கு.வி.மு.ச.பிரிவு 255(1)ன் கீழ் விடுதலை** செய்து தீர்ப்பு அளிக்கப்படுகிறது.

14. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவில்லை. எதிரி எழுதிக் கொடுத்த பிணைப் பத்திரத்தை மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026ம் ஆண்டு ஜீலை மாதம் 13ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.13 18:18:48 +0530

**நீதித்துறை நடுவர் எண். 1,**
**பவானி.**

<u>இணைப்பு:</u>

<u>அரசு தரப்பு சாட்சிகள்:</u>

| அ.சா.எண். | அரசு தரப்பு சாட்சிகள் | குறிப்பு |
|---|---|---|
| அ.சா.1 | திரு.வரதராஜன். | பாதிக்கப்பட்ட மற்றும் புகார்தாரர் |
| அ.சா.2 | திரு.அண்ணாதுரை. | பார்வை மகஜர் சாட்சி |
| அ.சா.3 | திரு.ராஜேந்திரன். | பார்வை மகஜர் சாட்சி |

| | | |
|---|---|---|
| அ.சா.4 | திருமதி.லோகேஸ்வரி. | கண்ணுற்ற மற்றும் பாதிக்கப்பட்ட சாட்சி |
| அ.சா.5 | திரு.சக்திவேல். | காவல் சிறப்பு உதவி ஆய்வாளர். |

<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>

| அ.சா.ஆ. எண்.1 | தேதி | சான்றாவணங்கள் | யாரால் குறியீடு செய்யப் பட்டது | குறிப்பு |
|---|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | 09.09.2023 | புகார் வாக்குமூலம். | அ.சா.1 | அசல் |
| அ.சா.ஆ.2 | 09.09.2023 | பார்வை மகஜர். | அ.சா.2 | அசல் |
| அ.சா.ஆ.3 | 09.09.2023 | முதல் தகவல் அறிக்கை. | அ.சா.5 | அசல் |
| அ.சா.ஆ.4 | 09.09.2023 | மாதிரி வரைபடம். | அ.சா.5 | அசல் |
| அ.சா.ஆ.5 | 15.09.2023 | TN 33 BE 7560 என்ற பதவு எண் கொண்ட இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை. | அ.சா.5 | அசல் |
| அ.சா.ஆ.6 | 15.09.2023 | TN 28 J 2323 என்ற பதிவு எண் கொண்ட காரின் மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை | அ.சா.5 | அசல் |
| அ.சா.ஆ.7 | 04.10.2023 | பவானி மெடிக்கல் சென்டர் மருத்துவமனையில் சாட்சி வரதராஜுன் காயச்சான்று | அ.சா.5 | அசல் |
| அ.சா.ஆ.8 | 29.09.2023 | லோகேஸ்வரியின் காயச்சான்று | அ.சா.5 | அசல் |
| அ.சா.ஆ.9 | 26.10.2023 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை | அ.சா.5 | அசல் |

<u>அரசு தரப்பு சான்றுபொருட்கள்</u>: – இல்லை –

<u>எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுபொருட்கள்:–</u> – இல்லை –

<u>குறிப்பு:</u>

1. எதிரி வழக்கு விசாரணையின்போது நீதிமன்ற பிணையில் இருந்து வருகிறார்.
2. சாட்சிகள் எவரும் 3 வாய்தாக்களுக்கு மேல் அழைக்கப்படவில்லை.
3. தீர்ப்பு குறித்து எதிரிக்கு தெரிவிக்கப்பட்டது.

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.13 18:18:53 +0530

**நீதித்துறை நடுவர் எண். 1,**
**பவானி.**